## பண்டாரவெல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 08 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டாரவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 274,193 பெறுமதியான பொருட் பதிவேட்டு பண்டங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டமையால் மூலதன செலவீட்டுற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீது மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் அங்கீகாரம் ஒன்று இன்றி நிலையான சொத்துக்கள் மீதி ரூபா 459,654 இனால் பதிவழிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபா 4,620,345 தொகை பெறுமதியான 06 கடன்பட்டோர் மீதிகள் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 4,771,547 தொகை பெறுமதியான 07 கடன்கொடுத்தோர் மீதிகள் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 46,387 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானக் கணக்குகளில் ரூபா 157,707 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது .

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,782,957 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,993,994 ஆக இருந்தது.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 17 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான காணிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 132(ஓ) ஆம் பிரிவு மற்றும் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 மே 24 ஆந் திகதிய 12/ஆ/1 இலக்கம் கொண்ட கடிதம | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி நலன்புரிச் சங்க கட்டிடமொன்றிற்கு மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 18,500 தொகை உதவியாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) 180 ஆம் விதி இலக்கம் மற்றும் மாகாண பிரதான செயலாளரின் 2010 மார்ச் 24 ஆந் திகதிய 2/மு/1 இலக்க கடிதம் | பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோகத்தர்களினால் ரூபா 22,000 பெறுமதியான பிணை வைப்புக்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 ஆம் விதி | வருடத்திற்கு ஒரு முறையேனும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது பரிசோதனை மேற்கொள்ளல் நடைபெற வேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டின் போது கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் தாபன வதிக் கோவை XXIV ஆம் அத்தியாயம் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த 05 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 168,750 கூட்டுத்தொகையான பதவியணியினர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது நிருவாக சுற்று நிருபம்

| | | |
|---|---|---|
| | 1990 அக்டோபர் 10 திகதிய 41/90 ஆம் இலக்கம் சுற்று நிருபம் | எரிபொருள் எரிவினை பரிசோதனை செய்யாமல் 2015 ஆண்டின் போது லொறி வண்டி மற்றும் பெக்கோ இயந்திரத்திற்கு ரூபா 180,417 பெறுமதியான 1899 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 1980 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டிருந்த 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23 ''அ'' ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வருடாந்தம் செயற்படுத்தப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய தொழில் முயற்சிகள் காணப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,431,704 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,916,499 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை ஏக்கர் வரி மற்றும் நீர்க் கட்டண வருமானம் அறவீடு செய்தல் 6% - 38% இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ஏக்கர் வரி மற்றும் நீர்க் கட்டண வருமானம் சேகரிக்கும் சதவீதம் 0% மற்றும் 31% ஆகக் காணப்பட்டமையால் சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 5,339,484 தொகையும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,693,071 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் முச்சக்கர வண்டிகளுக்காக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 7 செலுத்துகை டவர்கள் நடத்துவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------------

2014 ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் விதப்புரைகளை 2015 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது ரூபா 35,855,811 தொகை செலவிடப்பட்டு பண்டாரவெல பிரதேச சபைக் கட்டிடம், நூலகம், வாராந்த சந்தை மற்றும் மலசலகூட முறைமை என்பன நிர்மாணிப்பதற்காக சபையின் கிணிகம விளையாட்டுத் திடலுக்கு பதிலாக புகையிரதத் திணைக்களத்துக்கு சொந்தமான பாதுகாப்பு பிரதேசத்தை தெரிவு செய்து வருடாந்தம் ரூபா 109,760 தொகை குத்தகை ஒன்றிற்கு 05 வருடங்களுக்கு குத்தகை உடன்படிக்கை மற்றும் பாதை பாதுகாப்பு பிரதேசத்தை சேர்ந்த 15 மீற்றர் பகுதியில் நிர்மாண வேலைகள் அடங்குகின்றமையால் மாகாண பெருந்தெருக்கள் பணிப்பாளருடன் நட்டஈடு கோருவதில்லை என உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பண்டாரவெல பிரதேச சபைக் கட்டிடத்தில் தரை ஓடுகள் பதிக்கும் விடயம் தொடர்பாக முடிவுற்ற வேலை பெறுமதி ரூபா 155,873 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானம் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

--------------------------------------------------

மீளாய்வாண்டின் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

2015 ஆண்டிற்காக பிரதேச சபை தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்றுமேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) இருப்புக் கட்டுப்பாடு

(எ) வாகனக் கட்டுப்பாடு